# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்

**தரம் - 08** **நேரம்: 02 மணித்தியாலம்**

### பகுதி - I

**எல்லா வினாக்களிற்கும் விடை தருக**

1. கணினியின் பிரதான நினைவகமாக கருதப்படுவது?
   1. வாசிப்பு மட்டும் நினைவகம்  2. தற்போக்கு பெறுவழி நினைவகம்
   3. மையமுறைவழியாக்க அலகு  4. பதுக்கு நினைவகம்

2. 2ம் தலைமுறைக் கணினியில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் யாது?
   1. வெற்றிடக் குழாய்  2. நுண்முறைவழியாக்கி
   3. ஒருங்கிணைந்த சுற்று  4. திரான்சிஸ்றர்

3. கணினியில் தரவுகள் சேமித்து வைக்க பயன்படுத்தப்படும் மிகச்சிறிய சேமிப்பலகு யாது?
   1. GB  2. Nibble  3. Bit  4. Byte

4. தந்தையின் வயது 40 ஆகும். மகனின் வயது 16 ஆகும். தந்தையினதும் மகனினதும் வயதுக்கிடையான வேறுபாடு யாது?
   1. $10000_2$  2. $11000_2$  3. $10100_2$  4. $11010_2$

5. பின்வரும் இரும எண் $10011_2$ இற்கு சமவலுவான பதின்ம எண் யாது?
   1. 19  2. 18  3. 16  4. 20

6. தொலைக்காட்சியை மடிக்கணினியுடன் இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் துறை யாது?
   1. VGA துறை  2. DVI துறை  3. HDMI துறை  4. USB துறை

7. பின்வருவனவற்றுள் எது ஒரு திறந்த மூல இயக்க முறைமையாகும்?
   1. Blackberry  2. Apple  3. Ubuntu  4. Windows

8. பின்வருவனவற்றுள் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் அல்லாதது?
   1. iWork page  2. Word perfect
   3. Microsoft Word  4. Libre Office Impress

9. கணினியொன்று வலையமைப்புடன் தொடர்புபடாதிருப்பதற்கு காரணமாக அமையக் கூடியது?
   1. மென்பொருள் சார் பிரச்சினையாகும்.
   2. வன்பொருள் சார் பிரச்சினையாகும்.
   3. நச்சு நிரல் தொற்றாகும்.
   4. மேற்கூறிய அனைத்து விடயங்களுமாகும்.

10. பின்வருவனவற்றுள் எது தேடல்பொறிக்கு உதாரணமாக அமைவது?
   1. Safari  2. Google  3. Internet Explorer  4. Google chrome

11. ALU என்பதன் விரிவாக்கம் யாது?
   1. Assisted Limit unit
   2. Arithmetic Logical unit
   2. Application Layer User
   4. Arithmetic Labour Unit

12. பின்வருவனவற்றுள் scratch மென்பொருளில் காணப்படாத Block tab எது?
   1. Motion
   2. Operators
   3. Variables
   4. Events

13.  எனும் குறியீடானது பாய்ச்சற் கோட்டுப்படத்தில் எதனைக் குறிக்கின்றது?
   1. செய்முறை
   2. உள்ளீடு
   3. தீர்மானம்
   4. ஆரம்பம்

14.  அருகில் காட்டப்பட்டுள்ள படவுருவானது எவ் இயக்கமுறைக்குரியது?
   1. Windows
   2. Ubuntu
   3. Face book
   4. Fedora

15. DVD ஒன்றின் கொள்ளளவு யாது?
   1. 4.7 – 9 GB
   2. 650 – 900 MB
   3. 4.7- 16 GB
   4. 12 – 18 GB

16. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பயன்படுத்தப்படும் Ctrl + X எனும் குறுஞ்சாவி எச் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது?
   1. பிரதி செய்தல் (Copy)
   2. ஓட்டுதல் (Paste)
   3. வெட்டுதல் (cut)
   4. சேமித்தல் (Save)

17. விசைப்பலகையில் காணப்படும் செயல்சார் சாவிகளின் எண்ணிக்கை யாது?
   1. 100
   2. 104
   3. 12
   4. 26

18. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க?
   a. வலைமேலோடி என்பது ஒரு மென்பொருளாகும்
   b. இயக்க முறைமை என்பது வன்பொருள் மென்பொருள் இரண்டும் ஆகும்
   c. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் ஆவணங்கள் தயாரிக்க பயன்படுத்தப்படும்.

   1. a மட்டும்
   2. a,b மட்டும்
   3. a,c மட்டும்
   4. a,b,c எல்லாம்


19. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் உள்ள ஒரு ஆவணத்தில் காணப்படும் உள்ளடக்கத்தை பிரதி செய்ய பயன்படுத்தப்படும் படவுரு யாது?
   1. 
   2. 
   3. 
   4. 

20. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் ஆவணம் ஒன்றில் சொற்களின் இடையே இடைவெளி கூடுதலாக காணப்படின் எவ் நிறத்தால் காட்டப்படும்?
   1. சிவப்பு
   2. நீலம்
   3. கறுப்பு
   4. மஞ்சள்


# பகுதி II

- **முதலாம் வினாவிற்கும் ஏனைய இரண்டு வினாக்கள் உட்பட மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக**
- **ஓவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

1. 1. கணினியின் பண்புகள் 2 தருக?
   2. உள்ளீட்டுச் சாதனமாகவும் வெளியீட்டுச் சாதனமாகவும் தொழிற்படும் சாதனங்கள் 2 தருக?
   3. மையமுறைவழியாக்க அலகின் பகுதிகள் எவை?
   4. விவசாயத்துறையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலின் பிரயோகங்கள் 2 தருக?
   5. கோப்பின் கூறுகள் எவை?
   6. சமூக வலைத்தளத்திற்கு ஒரு உதாரணம் தருக?
   7. கணினியை வலையமைப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும் துறை யாது?
   8. Ctrl + C என்னும் குறுஞ்சாவி சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளின் எச் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்?
   9. $101011_2$ இனை பதின்ம எண்ணாக மாற்றுக?
   10. $348_{10}$ இனை இரும எண்ணாக மாற்றுக? (10 X 2 = 20 புள்ளிகள்)
2. கணினியால் விளங்கிக் கொள்ளக்கூடிய இலக்கங்களின் சேர்க்கை எண்முறைமை எனப்படுகின்றது.
   1. பின்வரும் பதின்ம எண்களை இரும எண்களாக மாற்றுக. (படிமுறைகளை தெளிவாகக் காட்டுக)
      1) $38_{10}$ 2) $127_{10}$ 3) $542_{10}$ 4) $954_{10}$ 5) $1038_{10}$ (5 X 2 = 10 புள்ளிகள்)
   2. பின்வரும் இரும எண்களை பதின்ம எண்களாக மாற்றுக. (படிமுறைகளை தெளிவாகக் காட்டுக)
      1) $11011_2$ 2) $1010101_2$ 3) $100011_2$ 4) $1111101_2$ 5) $111011_2$ (5 X 2 = 10 புள்ளிகள்)
3. கீழே தரப்பட்டுள்ள ஆவணம் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளை பயன்படுத்தி உருவாக்கப்பட்டு 1 தொடக்கம் 5 முகப்படையாளங்களினால் காட்டப்படுள்ளவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.



சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பயன்படுத்தப்படும் கருவிகள் சில A-P முகப்படையாளங்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளன.




1 – 5 வரையிலான செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கருவிகளை அடையாளங் கண்டு அவற்றிற்குரிய ஆங்கில எழுத்தினை எழுதுக.

1.....................................          2.....................................

3.....................................          4.....................................

5.....................................          (20 புள்ளிகள்)

4. பிரசினங்களுக்கு இலகுவான முறையில் தீர்வை காண்பதற்கு நெறிமுறைகளும் பாய்ச்சல்கோட்டு வரைபடமும் பயன்படுத்தப்படுகின்றன.

   1. நெறிமுறையின் அடிப்படைக் கட்டுப்பாட்டு கட்டமைப்புக்கள் யாவை? (4 புள்ளிகள்)

   2. ஒரு சதுரத்தின் சுற்றளவைக் காண்பதற்கான நெறிமுறையை ஒழுங்கு முறையில் எழுதுக? (6 புள்ளிகள்)

   3. தரம் 8A வகுப்பில் கணித பாடத்தில் 35 அல்லது அதன் மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள் ஏனையோர் சித்தியடையவில்லை எனக் காட்டுவதற்கான பாய்ச்சல் கோட்டு வரைபடத்தினை வரைக? (10 புள்ளிகள்)